பொருட்டு கும்முடிப்பூண்டி வட்டத் தலைநகரில் வட்ட அரசினர் மருத்துவ மனை அமைப்பதற்கு முன்னுரிமை தர அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் 'முன்னுரிமை' என்ற சொல்லைப் பயன் படுத்தியதை வரவேற்கிறேன். இதற்கு முன்பே வட்டத் தலை நகரான இடங்கள் சில இருக்கின்றன. அந்த முன்னுரிமைப்படி எப்பொழுது நிதி கிடைக்கிறதோ அப்பொழுது கவனிக்கப் படும்.

வேடந்தாங்கல் மருத்துவ மனைக்கு மானியம்

* 230 வினா—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அச்சிறுபாக்கம் தொகுதியில் வேடந்தாங்கல் கிராமத்தில் Service International Organisation நடத்தும் மருத்துவ மனைக்கு மானியம் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

குடிநீர் வழங்கு திட்டங்கள்

* 231 வினா—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் வட்டம், தரங்கம்பாடி பகுதிக்கு பாதுகாக்கப் பட்ட குடிநீர் வசதி ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அப்பேரூராட்சி மன்றத்திலிருந்து கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) இதுகுறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

1975 நவம்பர் 7]

(இ) தரங்கம்பாடி குடிநீர் திட்டத்திற்கு ஆய்வு வேலைகள் முடிந்தன. மதிப்பீட்டுத் தொகையான ரூ. 16.5 இலட்சமும், பராமரிப்பு செலவுத் தொகையான ரூ. 44,000-ம் அரசிடம் கடனாகப் பெற்றால் ஆண்டு ஈவுத்தொகை எவ்வாறு திரும்பச் செலுத்துவது என்பதற்கான பேரூராட்சியின் பதில் கிடைத்தபிறகு மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தம்முடைய பதிலில் கூறியதைப் போல், ரூ. 16.5 இலட்சம் செலுத்தத்தக்க அளவுக்கு அந்தப் பேரூராட்சி மன்றத்திற்கு வருவாய் இல்லாத காரணத்தால், மானியம் என்ற முறையில் தொகை அளித்து, ஏறத்தாழ 25 ஆண்டுக்காலமாக இருந்துவரும் அந்தக் குறையினைப் போக்குவதற்கு அரசு முன்வருமா? மானியமாக இல்லையென்றாலும், சுலப நீண்ட காலத் தவணைகளில் வசூலித்துக்கொள்ளும் முறையிலாவது அதை உருவாக்கி விரைந்து செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, கடனாகவாவது நிதி கிடைக்கிறதா என்று தெரியாத கட்டம் இது. ஏனென்றால், இப்படிப்பட்ட எந்த ஒரு பெரிய திட்டமாக இருந்தாலும், அதை நிறைவேற்றுவதற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து கடன் பெற வேண்டியிருக்கிறது. அக்கழகம் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்கு அல்லது நான்கில் மூன்று பங்குத் தொகை கடனைத் தந்தாலும் மீதக் கடனை மாநில அரசு ஏற்கவேண்டும். அப்படி ஆயுள் காப்பீட்டுக் கழகம் கடன் தரும்போது, அதைத் திருப்பிக் கட்டுவதற்கான சக்தி அந்த அமைப்புக்கு இருக்கும்போதுதான் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். திருப்பிக் கட்டும் சக்தி குடிநீர் வழங்கிய பின்னர் சில பேரூராட்சிகளுக்கும், நகர மன்றங்களுக்கும் ஏற்படுகிறது. ஆனால், குடிநீர் வழங்குவதன் மூலமாகக் கடனை 20 ஆண்டுக் காலத்திற்குள் அல்லது ஆயுள் காப்பீட்டுக் கழகம் குறிப்பிடுகிற காலகட்டத்தில் திருப்பிக் கட்டமுடியும் என்ற நம்பிக்கைக்கு உரிய சூழ்நிலை இருந்தால் அதை நிறைவேற்ற முடியுமே தவிர மானியம் கொடுக்கும் அளவுக்கு மாநில நிதிவசதி தாராளமாக இல்லை என்பது மாண்புமிகு உறுப்பினர் அறிந்ததாகும்.

திரு. என். கிட்டப்பா : மேற்கண்ட பகுதியில் குடிநீர் வசதி செய்து கொடுக்க ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மூலமாக ஆய்வு நடைபெற்று, அந்தப் பேரூராட்சிக்கு ரீ-பேயிங் கபாசிடி இல்லை என்று மறுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது. எனவே, அரசு நீண்ட காலமாக இருந்துவருகிற இந்தக் குறையினை தனித் தன்மையுடன் அணுக ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இதே விதமான தனித்தன்மையுள்ள இடங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் நான்கைந்து இடங்கள் இருக்கின்றன. ஆகவே, அவைகளுக்கெல்லாம் நிதியை எப்படிப் பெறுவது என்பது—அரசு மானியமாகத் தருவதாக இருந்தாலும், அரசுக்கு அந்த நிதி எந்த இடத்திலிருந்து கிடைக்கச் செய்வது என்பது பெரிய பிரச்னையாகும். ஆனால் தொடர்ந்து ஆலோசிக்கப்படும்.

* 232 **வினா—திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தாலுகா, சிவந்திபுரம் ஊராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்திற்கு ஆய்வு வேலை செய்வதற்கான தொகை கட்டப்பட்டுவிட்டதா?

(இ) ஆம் எனில், மேற்கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) ஆய்வு வேலைகள் முடிக்கப்பட்டு இவ்வூராட்சிக்கு குடிநீர் திட்டம் அமைப்பதற்கான வரைவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்திட்டத்திற்கான நிர்மாணச் செலவு ரூ. 11.43 இலட்சம் எனவும் ஆண்டுதோறும் பராமரிப்புச் செலவு ரூ. 16,500 எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. திட்டச் செலவினங்களை கடனைப் பெற்று நிறைவேற்றவும் திட்டத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைத்து நிறைவேற்றவும் தேவைப்படும் தீர்மானத்தை அனுப்பி வைக்குமாறு ஊராட்சி மன்றத் தலைவர் 28—4—1975-ல் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.